**OS.No.111/2025, Dated 11.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 11th day of February 2026.

**வா.சா.2 –செல்லபெருமாள் த/பெ.சண்முகம் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது பூர்வீகம் நம்பேடு கிராமம் ஆகும். வாதியும், நானும் உறவினர்கள் தான். நாங்கள் இருவரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் தான். நான் பி.எஸ்.சி வரை படித்துள்ளேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு பிரதிவாதியை சிறுவயது முதலே தெரியும். பிரதிவாதி மேட்டுகுடிசையை சேர்ந்தவர் ஆவார். வாதியும் விவசாய வேலை தான் செய்து வருகிறார். பிரதிவாதியும் விவசாய வேலை தான் செய்து வருகிறார். வாதி பிரதிவாதி தன்னிடம் ரூ.1,15,000/– கடனாக வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த கடனுக்கு முன்பே வாதி பிரதிவாதியிடையே பணப்பரிவர்த்தனை இருந்ததா என்றால் வாதியின் தகப்பனார் ஆறுமுகத்திற்கும், பிரதிவாதியின் தகப்பனார் ஸ்ரீராமலுக்கும் இடையே பணப்பரிவர்த்தனை இருந்தது. மேற்படி பணப்பரிவர்த்தனைக்கு பாதுகாப்பாக இவ்வழக்கின் பிரதிவாதியிடமும் அவர்கள் கையெழுத்து வாங்குவது வழக்கமா என்றால் இல்லை. ஏற்கனவே அவ்வாறு நடந்த பணப்பரிவர்த்தனைக்கு நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். பிரதிவாதிக்கும், வாதியின் தகப்பனாருக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்துள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பணப்பரிவர்த்தனையின்போது ஒரு கடனுக்கு ரூ.1,00,000/–க்கு மேல் கடன் தொகை இருந்தால் இரண்டு மூன்று பாண்டுகள் வாதியின் தகப்பனார் வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். வாதியும் கடன் கொடுக்கும்போது ரூ.1,00,000/–க்கு மேல் கடன் தொகை இருந்தால், ஒவ்வொரு லட்சத்துக்கும் ஒவ்வொரு பாண்டு வாங்குவார் என்றால் சரிதான். அவர் ரூ.1,50,000/– ஒரே கடனுறுதி சீட்டின் பேரில் கொடுத்துள்ளார். அவ்வாறு அவர் கொடுத்தது சுமார் 10 வருடங்களுக்கு முன்பாகும். அதற்கு பின்பு அவ்வாறு கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. 04.01.2021 அன்று வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்தார்.

அன்றைய தினம் ரூ.1,15,000/- கடனாக கொடுத்தார். பணம் கொடுக்கும்போது நான் அங்கு தான் இருந்தேன். ரூ.500/- நோட்டுகளாகதான் கடன் கொடுத்தார். காலையில் 8.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் கடன் கொடுத்திருப்பார். வாதியின் வீட்டில் வைத்து தான் கடன் கொடுத்தார். பணம் கொடுக்கும் போது சேகர், பாஸ்கர், சுப்ரமணியன், ஆறுமுகம் ஆகியோர் அங்கிருந்தார்கள். ஆறுமுகம் பணத்தை அவரது மகன் சேகர் கையில் கொடுத்து, சேகர் பிரதிவாதியிடம் அந்த பணத்தை கொடுத்தார். பாஸ்கர் தான் கடனுறுதி சீட்டை வாங்கி வந்தார். நானும், பழனியும் அதில் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். பழனி வாதியின் உறவினரா என்றால் இல்லை. என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கிவிட்டு கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்தார்களா என்றால் இல்லை. பூர்த்தி செய்த பின்னிட்டு தான் என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். நான் முத்திரை தாளில் சாட்சி கையொப்பம் போட்டேனா அல்லது கடனுறுதி சீட்டில் கையொப்பம் போட்டேனா என்றால் கடனுறுதி சீட்டில் தான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். கடனுறுதி சீட்டை பூர்த்தி செய்த பின்னிட்டு தான் பிரதிவாதி அதில் கையொப்பம் செய்தார். கடனை 2 பைசா வட்டிக்கு வாதி கொடுத்தார். பிரதிவாதி ஒரு கையெழுத்து தான் போட்டார். வாதியின் தகப்பனார் பிரதிவாதி மீது ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. சுப்ரமணி என்பவர் தான் பாண்டை பூர்த்தி செய்தார். சுப்ரமணி என்பவரை யார் அழைத்து வந்தார் என்றால் பாஸ்கர் தான் அழைத்து வந்தார். சுப்ரமணியும், வாதியும் உறவினர்களா என்றால் இல்லை. நான் பணம் கொடுக்கும்போது தான் உடன் இருந்தேன். அதன் பின்னிட்டு பிரதிவாதி வட்டி கொடுத்தாரா இல்லையா என்ற விபரங்கள் எனக்கு தெரியாது. பாண்டில் நான் முதலாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன். நான் நீல நிற பேனாவால்தான் சாட்சி கையொப்பம் போட்டேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் பிரதிவாதி வாதியிடம் தொகை எதுவும்பெறவில்லை என்றாலும், வாதியின் தகப்பனாருக்கு

பிரதிவாதி கொடுத்திருந்த பாண்டை பயன்படுத்தி பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் சொல்லியுள்ள படி பிரதிவாதி எவ்வித தொகையும் பெறவில்லை என்பதால் அவர் வாதிக்கு எவ்வித தொகையும் திருப்பி செலுத்த அவசியமில்லை என்றால் சரியல்ல. எனவே வாதி தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.02.11 13:11:54 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி